ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே,

''1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு. 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் கோருவார். மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1994 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

''1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்,''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

9. விதி 110-ன்கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

ஐம்பதுக்கும் குறைவான மாணவர்கள் உள்ள தொடக்கப் பள்ளிகளை மூடப் போவதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன் கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கை வைக்க அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய அறிக்கையை இப்போது பேரவைக்கு அவர் அளிக்கலாம்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் 50-க்கும் குறைவான மாணாக்கர் எண்ணிக்கையுள்ள தொடக்கப் பள்ளிகளை மூடிவிடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதைப் போல் சித்தரிக்கும் செய்திகள் நாள் ஏடுகளில் வெளி வந்துள்ளன. அச்செய்திகள் ஆதாரமற்றவை. எனினும் பொது மக்கள் மத்தியில் தேவையற்ற அச்ச உணர்வைத் தோற்றுவித்துள்ளன என்கிற தகவல் அரசுக்கு கிடைத்துள்ளது. இந்நிலையில் மேற்கண்ட செய்திகள் உண்மைக்கு மாறானவை என்பதையும், ஆதாரமற்றவை என்பதையும் அரசின் சார்பில் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது.